අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

## சைவநெறி

## வினாத்தாள் I & II




தொலைக்கல்வி மேம்பாட்டுக்கிளை - கல்வி அமைச்சு

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

**கல்வி அமைச்சு**

| 12 | T | I, II |
|---|---|---|

**தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை**

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)**

| **சைவநெறி - I, II** | **நேரம் : 3 மணித்தியாலம்** |
|---|---|
| **மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்** | வினாக்களை வாசித்து, வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக. |

**சைவநெறி - I**

**அறிவுறுத்தல்கள்**

* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுத்தல்களையும் கவனமாக வாசித்து பின்பற்றுக.

1. "உம்பர் தரு தேனுமணிக் கசிவாகி ....." என்னும் பாடலில் போற்றப்படும் தெய்வம்
(1) விநாயகர் (2) விஷ்ணு (3) பிரமம் (4) சிவன்

2. உலக தோற்றத்திற்கு காரணமாக அமைவது
(1) இறைவன் (2) பிரம்மா (3) கன்மம் (4) மாயை

3. உண்மை பேசு (சாத்தியம் வத) என்பது பற்றி குறிப்பிடும் நூல்
(1) வேதம் (2) பகவத்கீதை (3) உபநிமிடதம் (4) கந்தபுராணம்

4. பஞ்சாங்கம் குறிப்பிடும் காரணங்கள் எத்தனை
(1) 27 (2) 60 (3) 101 (4) 207

5. வைரவருக்குரிய விரதங்களில் ஒன்று
(1) வைகாசி விசாகம் (2) திருக்கார்த்திகை
(3) பங்குனி உத்தரம் (4) சித்திரைப் பரணி

6. திருமண சடங்கின் போது முள்முருக்கை இருவீட்டார் வளவுகளிலும் எத்திசையில் நாட்டப்படும்
(1) ஈசான மூலை (2) அக்கினி மூலை (3) வாயுமுலை (4) நிருதி மூலை

7. "காதால் கேட்கப்படுவது" என்பதனால் வேதங்களுக்கு வழங்கப்படும் பெயர்
(1) எழுதாமறை (2) சுருதி (3) சுயம்பு (4) ஆம் நயம்

8. பெரிய புராணம் எத்தனை காண்டங்களைக் கொண்டுள்ளது.
(1) 07 (2) 12 (3) 13 (4) 16

9. நித்திய பூசைகளில் ஏற்படுங் குறைபாடுகளை தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படுவது
(1) நிஷ்காமிய கிரியை (2) திருவிழாக்கள்
(3) நவராத்திரி (4) காமிய கிரியை

10. திருமறைக் காட்டுக் கதவினை மூட திருநாவுக்கரசர் பாடிய பதிகம்
(1) பண்ணினேர்... (2) வாழ்க அந்தணர்... (3) மாதர் பிறை... (4) சதுரம் மறை...

11. சித்தாந்த சாத்திர முதல் நூலாக கொள்ளப்படுவது

(1) சிவஞான போதம் (2) உண்மை போதம்
(3) கொடிக்கவி (4) சிவஞான சித்தியார்

12. தமிழாகமம் எத்தனையாம் திருமுறையாக அமைந்துள்ளது

(1) 08 (2) 09 (3) 10 (4) 12

13. சுவாமி விபுலாநந்தருக்கு துறவு நாட்டத்தை ஏற்படுத்தியவர்.

(1) இராம கிருஷ்ணர் (2) விவேகானந்தர்
(3) ஆறுமுகநாவலர் (4) திருவிளக்கம்

14. சைவசித்தாந்தம் சொரூபலக்கண நிலையில் கடவுளை எவ்வாறு கூறுகின்றது

(1) மகேஸ்வரன் (2) பரமசிவன் (3) உருத்திரன் (4) மால்

15. “சதசத்து” என குறிப்பிடப்படுவது

(1) ஆன்மா (2) இறைவன் (3) ஆணவம் (4) கன்மம்

16. “பிரமன் தன் சிரம் அரிந்த பெரியோய் போற்றி…” என சிவனை வைரவராகவே கருதியவர்

(1) திருஞான சம்பந்தர் (2) சுந்தரமூர்த்தி நாயனார்
(3) திருநாவுக்கரசர் (4) மாணிக்கவாசகர்

17. இலங்கையை “சிவபூமி” என அழைத்தவர்

(1) திருமூலர் (2) கச்சியப்பச் சிவாச்சாரியார்
(3) சேக்கிழார் (4) சி.வை.கணபதிப்பிள்ளை

18. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வர ஆலய பூசை செய்பவர்களை எவ்வாறு அழைக்கப்படுகின்றது

(1) வண்ணக்கர் (2) பூசாரி (3) அந்தணர் (4) சங்கமர்

19. சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் முதல் நிர்வாக சபையின் தலைவராக விளங்கியவர்

(1) W.விஜயரத்தினம் (2) சேர்.பொன்.இராமநாதன்
(3) சு.இராசரத்தினம் (4) எஸ்.குமார சூரியர்

20. “உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே” என குறிப்பிடப்படும் நூல்

(1) திருக்குறள் (2) வளையாபதி (3) மணிமேகலை (4) சிலப்பதிகாரம்

21. துக்கம், துக்க உற்பத்தி, துக்க நிவாரணம் பற்றி விளக்கும் நூல்

(1) திருமந்திரம் (2) உபநிமிடதம் (3) வேதம் (4) தம்மபதம்

22. “கஞ்சித் தொட்டி தருமம்” மேற்கொண்ட ஈழத்து பெரியார்

(1) ஆறுமுக நாவலர் (2) இராமகிருஷ்ணர்
(3) காசிவாசிசெந்திநாதையர் (4) சைவப்புலவர் அருணசலதேசிகர்

23. பாவ புண்ணியங்களைக் கணக்கிடும் பணியை மேற்கொள்கின்றவர்

(1) எமதர்ம ராஜா (2) மிருகண்டு முனிவர்
(3) சித்திரபுத்திரனார் (4) மார்க்கண்டேயர்

24. “வானவன் மாதேவி ஈச்சரம்” அமைந்த இடம்

(1) அநுராதபுரம் (2) பொலன்னறுவை (3) மாதோட்டை (4) கந்தளாய்

25. கண்ணகியின் கோபம் தணியும் பொருட்டுச் செய்யப்படும் சடங்கு

(1) குளுர்த்திச் சடங்கு (2) மடையெடுத்தல் சடங்கு
(3) கதவு திறத்தல் சடங்கு (4) கலையாடுதல் சடங்கு

26. சரியை நெறியை கடைப்பிடித்து பெறுகின்ற முத்தி
(1) சாமீப முத்தி (2) சாரூப முத்தி (3) சாலோக முத்தி (4) சாயுச்சிய முத்தி

27. பிறவியை அனுபவிக்கின்ற போது புதிததாகச் செய்யப்படும் வினை
(1) பிராரத்தம் (2) சஞ்சிதம் (3) கன்மம் (4) ஆகாமியம்

28. ஆறுமுக நாவலருக்கு "நாவலர்" என்ற பட்டத்தை வழங்கிய ஆதினம்
(1) மதுரை ஆதீனம் (2) திருவாடுதுறை ஆதீனம்
(3) தருமபுர ஆதீனம் (4) நல்லை ஆதீனம்

29. "பட்ட கட்டையிற் பகற் குருடு போகிறது" என கூறியவர்
(1) மெய்கண்ட தேவர் (2) அருணந்தி சிவாச்சாரியார்
(3) மறைஞான சம்பந்தர் (4) உமாபதி சிவாச்சாரியார்

30. சைவ சமயத்தில் மேலானதாக மதிக்கப்படுவது
(1) அன்பு (2) கருணை (3) சத்தியம் (4) ஒப்பரவு

31. குரு வழிபாட்டால் முத்தி பெற்றவர் அடங்கும் தொகுதி
(1) சிறுத்தொண்டர், திருநீலகண்டர், இயற்பகையார்
(2) திருமூலர், குலச்சிறையார், அப்பூதியடிகள்
(3) அப்பூதியடிகள், பூசலார், சிறுத்தொண்டர்
(4) பூசலார், சாக்கிய நாயனார், கலிக்காமர்

32. திருவருட்பயன்
(1) சைவ சித்தாந்த முதல் நூல் ஆகும் (2) 120 பாடல்களை உடையது
(3) 12 அதிகாரம் கொண்டது (4) உமாபதி சிவாச்சாரியரால் அருளப்பட்டது

33. இருக்கு வேதம் என்பது
(1) பாட்டு என பொருள்படும்
(2) சிவன், சக்தி, விநாயகர் புகழ்ந்து பாடுகின்றது
(3) நீண்ட ஆயுள், செல்வம், நோய் நீக்கம் பற்றி கூறுகின்றது
(4) யாகங்களின் போது மேற்கொள்கின்ற சடங்குகள் பற்றி விளக்குகின்றது

34. தோத்திரப் பாடல்கள் என்பது
(1) நாயன்மார்களினால் பாடப்பட்டது
(2) சேக்கிழாரினால் தொகுக்கப்பட்டது
(3) திருமுறைகளுக்குப் பின்னர் தோற்றம் பெற்றவவை
(4) 11ம் திருமுறையாக கொள்ளப்படுகின்றன.

35. சைவ பரிபாலன சபை
(1) முதல் நிர்வாக தலைவராக ஆறுமுக நாவலர் விளங்கினார்
(2) 1888 ஆரம்பிக்கப்பட்டது
(3) கொழும்பில் தலைமை பீடத்தினைக் கொண்டுள்ளது
(4) சமய நிறுவனங்களில் காலத்தால் பிற்பட்டது.

36. சைவ சித்தாந்தம் குறிப்பிடும் ஆவணம்

(1) ஆன்மாவுக்கு இடையில் வந்த மலம் (2) ஆகந்துக மலம் எனப்படும்

(3) ஆன்மாவின் குணமாகும் (4) மூல மலம் எனவும் அழைக்கப்படுகின்றது

37. சமய தீட்சை

(1) அனுட்டானங்களை செய்ய அனுமதிக்கின்றது

(2) சிவபூசை செய்ய தகுதியை கொடுக்கின்றது

(3) சைவ சமயி என்ற தகுதியை கொடுக்கின்றது

(4) சாதகன் என்ற தகுதியை தருகின்றது

- கீழ்வரும் அட்டவணையில் A இலிருந்து I வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாக கொண்டு 38 தொடக்கம் 40 வரையான ஒவ்வொரு வினாவுக்குமான விடையைத் தெரிவு செய்க.

| பெரியோர் | அற்புதங்கள் | நூல் |
|---|---|---|
| A - உமாபதி சிவாச்சாரியார் | D - ஊமைப் பெண்ணை பேச வைத்தமை | G - முதல் மூன்று திருமுறைகள் |
| B - மாணிக்கவாசகர் | E - முள்ளிச் செடிக்கு முத்தி அளித்தமை | H - திருவாசகம் |
| C - திருஞான சம்பந்தர் | F - ஆண் பனையை பெண் பனையாக்கியமை | I - கொடிக்கவி |

38. சித்தாந்த அட்டகத்தை அருளியவரொடு தொடர்புடைய தொகுதி

(1) A, E, I (2) A, D, H (3) B, F, G (4) B, D, H

39. 8ம் திருமுறையோடு தொடர்புடைய தொகுதி

(1) B, F, G (2) A, E, I (3) C, F, I (4) B, D, H

40. ஆளுடைய பிள்ளையோடு தொடர்படைய தொகுதி

(1) B, D, G (2) C, F, G (3) A, D, H (4) C, E, I

(40x 1 = 40 புள்ளிகள்)

***

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

**கல்வி அமைச்சு** | 12 | T | I, II |

**தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை**

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)**

**சைவநெறி - I, II**

**சைவநெறி - II**

**அறிவுறுத்தல்கள்**

* முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

* முதலாம் வினாவின் விடைக்கு 20 புள்ளிகளும் இரண்டாம் வினா உட்பட ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** கீழ்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) கும்பாபிஷேகத்தின் மறு பெயர் இரண்டு தருக.
(ii) அருணகிரிநாதரினால் பாடல் பெற்ற தலங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
(iii) குங்கிலியக்கலய நாயனார் இல்லத்துக்குச் சென்ற சமயக்குரவர்கள் இருவரைக் குறிப்பிடுக.
(iv) "அஸ்தி சஞ்சயனம்" எனப்படுவது யாது?
(v) தூல, சூக்கும் பஞ்சாட்சரம் எனப்படுபவை யாவை?
(vi) "சாயா" கிரகங்களை குறிப்பிடுக.
(vii) ஒப்புரவு எனப்படுவது யாது?
(viii) மூவகை ஆன்மாக்களைத் தருக.
(ix) வரத பண்டிதரின் விநாயகருக்குரிய சஷ்டி விரதமான் மியத்தில் உரைத்த உபகதைகள் இரண்டினைத் தருக.
(x) பண்டிகை காலத்தில் நீர் மேற்கொள்ளும் கருமங்கள் நான்கு எழுதுக.

(10X2 = 20 புள்ளிகள்)

**2.** (i) கீழ்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.
(அ) குனித்த புருவமும்…
(ஆ) அந்தணாளன் உன்…
(இ) பாலுக்குப் பாலகன்…
(ஈ) யாவர்க்குமாம் இறைவற்கு…
(உ) தூக்கும் பனுவல்…
(ii) மேலே (i) இல் எழுதிய பாடல்களின் பொழிப்புரையை எழுதுக.

(3+2+5 = 10 புள்ளிகள்)

**3.** "வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்"
(i) ஆகமம் என்பதன் பொருள் யாது?
(ii) ஆகமம் குறிப்பிடும் விடயங்கள் மூன்று தருக.
(iii) ஆகமம் விளக்கும் கோயில் கிரியை பற்றி சுருக்கமாக விளக்குக.

(2+3+5 = 10 புள்ளிகள்)

4. "கண்டனன் தொழு மைந்தனைப் புல்லினன் களிப்பு உள்ளம்
கொண்டனர் புறம் நீ வின் பல் உகம் கொடியோன் செய்
ஒண்தனை புகுந்து எய்தனை போலும் ஒன்று உரை செய்யா
அண்டர்யாரையும் முறை முனை தழீஇயினன் அமரேசன்"
(i) இப் பாடலில் இடம்பெறும் நூல் எது? பாடியவர் யார்?
(ii) இப் பாடலின் பொருளை எழுதுக.
(iii) மீட்ச்சி படலத்தில் கூறப்பட்ட செய்திகளை சுருக்கமாக விளக்குக. (2+3+5 = 10 புள்ளிகள்)

**5.** “கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்”

(i) நாயன்மார்களினால் பாடல் பாடப்பட்ட ஈழத்திருத்தலங்கள் எவை?

(ii) கோயிலின் அவசியத்தை உணர்த்தும் முதுமொழிகள் மூன்று தருக.

(iii) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் பற்றி சுருக்கமாக விளக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

**6.** “பதி, பசு, பாசம் என்பன முப்பொருளாகும்”

(i) பதியின் எண் குணங்களில் நான்கினைத் தருக.

(ii) மூவகை கன்மங்களைக் குறிப்பிடுக.

(iii) ஆன்மா பற்றி சுருக்கமாக விளக்குக.

(2+3+5 = 10 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றில் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

(அ) திருநாவுக்கரசர்

(ஆ) விநாயக சஷ்டி

(இ) சைவ விழுமியங்கள்

(ஈ) கண்ணகி வழிபாடு

(5+5 = 10 புள்ளிகள்)

***